மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : காய்கறி மேம்பாட்டுத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டம் உட்பட தமிழ்நாடு முழுவதும் 1963-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், திருவையாறு, கும்பகோணம், பாபநாசம், வலங்கைமான், திருப்பனந்தாள், மன்னார்குடி, கோட்டூர், நாகப்பட்டிணம் ஆகிய வட்டாரங்கல் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

Ghero by Farm Workers in Coimbatore district

*15 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether Farm Workers had gheroed Power Board officials in Coimbatore district about 12th May 1970 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : விவர அறிக்கையிலே பார்த்தால் நான்கு முக்கியமான சென்டர்களிலே ஏற்கனவே கனெக்ஷன் இருந்து டிஸ்கனெக்ஷன் செய்யப்பட்டு, ஏ. இ. அவர்களை வற்புறுத்தியதன் காரணமாக ஏ. இ. கனெக்ஷன் கொடுத்த காரணத்தால் அந்தக் கூட்டம் கலைந்திருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி அதிகமான அதிகாரம் தலைவராக இருக்கும் ஏ.இ. க்குக் கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அமைச்சரின் விளக்க அறிக்கை துணை வினாவிற்கு அளித்த வினாவை விளக்கி அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மொய்தீன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் அளித்த விடை சுருக்கமாக இருந்த காரணத்தால் அவர்களுடைய மனது புண் பட்டு தவறான கருத்தை வெளிப்படுத்துவதாக நான் அறிந்து வருந்துகிறேன். அவர்கள், "தகுதியை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?" என்று கேட்டார்கள். நான், அந்தத் தகுதி, மாணவர்களை ஆராய்கிற, சோதிக்கிற உறுப்பினர்களாக அமைகிறவர்கள், போர்டு மெம்பர்கள் தகுதியைப் பொறுத்து இருக்கிற சா

@ 100-103-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

ணத்தால் அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு "அவரவர் தகுதியைப் பொறுத்தது" என்று சொன்னேன். அது அங்கத்தினர்களை உள்ளடக்கியது அல்ல; அது என்னுடைய நோக்கமும் அல்ல. ஆராய்கிறவர்களுடைய தகுதிக்கேற்ப, அவர்களுடைய மனப்பான்மைக்கேற்ப அது அமையும் என்ற முறையில்தான் நான் அவ்வாறு தெரிவித்தேன் என்பதை அங்கத்தினர் அவர்களுக்கும், அவைக்கும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: நான் மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

4. நடைமுறைக் கேள்விகள்.

(அ) திரு. நா. காசிராமன் அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் பெயர் குறித்து.

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்தச் சட்டப் பேரவையில் குடந்தைத் தொகுதி உறுப்பினராக இருக்கும் திரு. நா. காசிராமன் அவர்கள் காங்கிரஸ் (ஓ) விலிருந்து காங்கிரஸ் (என்) க்குப் போயிருப்பதாகவும், அவருக்கு வேறு இடம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் அப்படி மாறிவிட்டதாகச் சட்டப் பேரவைத் தலைவருக்குக் கடிதம் அனுப்பி இருக்கிறாரா? காங்கிரஸ் (ஓ) வில் இருந்து அவருடைய ராஜினாமா ஒப்புக்கொள்ளப்பட்டதாகக் கடிதம் வந்திருக்கிறதா? அவருடைய ராஜினாமா ஒப்புதல் பெறாத நிலையில் அவருக்குத் தனி இடம் ஒதுக்கி இருப்பது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காசிராமன் அவர்கள் காங்கிரஸ் (ஓ) விலிருந்து ராஜினாமா செய்து விட்டதாகப் பேரவைத் தலைவருக்கு அறிவித்திருக்கிறார்கள். அவருடைய ராஜினாமா ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டதா, இல்லையா என்பது முக்கியமான விஷயம் அல்ல. காசிராமன் அவர்கள் காங்கிரஸ் (ஓ) வில் இருந்து விலகி . . . . . இன்னொரு காங்கிரசுக்கு என்ன பெயர்?

திரு. நா. காசிராமன்: நான் காங்கிரஸ் (ஆர்) என்று எழுதி இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காங்கிரஸ் (ஆர்) என்றால் என்ன என்று தெரியவில்லை. அவர் இருந்த கட்சியில் இருந்து விலகி இந்த மன்றத்தில் வேறு இடம் வேண்டுமென்று கேட்ட நிலையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு அரசியல் ரீதியான மாநிலக் கட்சி இருக்கிறது. அந்தக் கட்சிக்காரர்களால் இவர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறாரா என்று தெரியவில்லை. அவர்கள் காங்கிரஸ் (ஓ) விலிருந்து ராஜினாமா செய்ததை ஏற்றுக்கொண்டார்களா இல்லையா என்பது, காசிராமன்